பட்டிருக்கிறது. அது அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டதா? அதன் அடிப்படையில்மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்து அந்த வனவிலங்கு சரணாலய கட்டணத்தை ரத்து செய்ய அரசாங்கம் முன் முயற்சிஎடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கார்களிலே செல்கின்றவர்கள் ஏதோ ஒரு குறைந்தக் கட்டணத்தைக் கொடுத்துவிட்டு செல்வதனாலே ஒன்றும் கஷ்டம் வந்துவிடாது. ஆனால் நடந்து செல்கின்றவர்களுக்கு அப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்குமேயானால் அதை அரசு பரிசீலித்து தக்க முடிவுகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவையாறு இசைக் கல்லூரி.

*வினா எண் 7—திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்: திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு இசைக்கல்லூரிக்கு எவ்வளவு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது?

(ஆ) அதனால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) திருவையாறு இசைக்கல்லூரிக்கு 20.85 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவுள்ளது.

(ஆ) இதனால் அரசுக்கு செலவு ஏதும் இல்லை. இதற்காகும் நட்ட ஈட்டுத் தொகையான 2.41 இலட்சம் சத்திரம் நிதியிலிருந்து பெறப்படும்.

மரவள்ளிக்கிழங்கு விளையும் மாவட்டங்கள்.

*வினா எண் 8—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மரவள்ளிக்கிழங்கு எந்தெந்த மாவட்டங்களில் விளைகிறது?

(ஆ) மரவள்ளிக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

1982 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) தமிழகத்தில் மரவள்ளிக்கிழங்கு சேலம், தென்னாற்காடு, கன்னியாகுமரி, மற்றும் தருமபுரி மாவட்டங்களில் மிக அதிகமான பரப்பளவிலும் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், செங்கல்பட்டு மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பரவலாகவும் பயிரிடப்பட்டு வருகிறது.

(ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் முள்ளுவாடி கிராமத்தில் ஒரு மரவள்ளிக்கிழங்கு பரிசோதனை நிலையம் இயங்கிவருகிறது.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சி நிலையத்தில் மரவள்ளிக் கிழங்கினுடைய புதிய ரகம் ஏதாவது கண்டு பிடிக்கப்பட்டிருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, எம்.வி.டி. முள்ளுவாடி என்கிற புதிய ரகம் கண்டுபிடிக்கப்பட்டு வேளாண்மை மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

வைகை நதி நீர்ப்பிடிப்புப் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன் தொகை.

*வினா எண் 9—திரு. மெ. ஆண்டிஅம்பலம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் வைகைநதி நீர்ப்பிடிப்பு பகுதியில் மண் அரிப்பு திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் 1981-82ல் எத்தனை பேருக்கு வழங்கப் பட்டது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் எந்த நபருக்கும் கடன் வழங்கப்படுவதில்லை. மண்வளப் பாதுகாப்புப் பணிகளைச் செய்து முடிப்பதற்காகும் செலவு கடனாகக் கருதப்படுகிறது. 1981–82 ஆம் ஆண்டில் மண் வளப் பாதுகாப்பு பணிகள் செய்து முடிப்பதற்காகிய செலவு ரூ. 5.47 இலட்சம் ஆகும்.

(ஆ) எந்த நபருக்கும் ரொக்கக் கடன் வழங்கப்படுவதில்லை. மதுரை மாவட்டம் வைகைநதி நீர்ப்பிடிப்புப் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 1981-82 ஆம் ஆண்டில் பயனடைந்தவர்கள் எண்ணிக்கை 762.

திரு. மெ. ஆண்டிஅம்பலம்: தலைவரவர்களே, வைகைநதி நீர்பிடிப்பு பகுதியில் மண் அரிப்பு, நீர்பிடிப்பு ஆகியவைகளினால் சேதத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு நஷ்டஈடு கொடுக்க முன்வருமா?